**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., L.L.M.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 நாள் வியாழக்கிழமை

**IA.No.04/2025 in OS.No.126/2019**

**(TNTM03000324/2019)**

1. சுகுணா
2. ராணி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. பாலகிருஷ்ணன்
2. லஷ்மி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 09.04.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஞானசேகரன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன்,B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்குரையை திருத்தம் செய்ய தாக்கல் செய்திருந்த மனுவானது சில குறைபாடுகளால் திருப்பப்பட்டதை குறைபாடுகளை சரி செய்து மீள சமர்ப்பிக்க ஏற்பட்ட 116 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. 1ம் மனுதாரர்/1ம் வாதி தாக்கல் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் 1ம் மனுதாரர், அசல் வழக்கில் 1ம் வாதி. 2ம் வாதி 1ம் வாதியின் சகோதரி. 1ம் மனுதாரர் தன் சகோதரியின் சார்பாக இந்த பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சங்கதிகள் குறித்து மனுதாரருக்கு நன்றாக தெரியும். மனுதாரர்கள் பாகப்பிரிவினை கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்கண்ட வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது, மனுதாரர்கள் தவறுதலாக சர்வே எண்ணைத் திருத்தம் செய்துள்ளார்கள். எனவே சரியான சர்வே எண்ணை மீண்டும் சேர்க்க திருத்தம் செய்வதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனு 05.02.2025 அன்று திருப்பப்பட்டது. மனுதாரருக்கு உடல்நலக்குறைவு காரணமாக, குறிப்பிட்ட காலத்திற்குள் மனுவை மீண்டும் சமர்ப்பிக்க இயலாமல் போய்விட்டது. மனுதாரர் நோயிலிருந்து தற்போது குணமடைந்துவிட்டார்.

குறைபாடுகளை சரி செய்து அந்த மனுவை மீண்டும் சமர்ப்பிக்கிறார். மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. இம்மனுவை அனுமதிக்காமல் போனால் மனுதாரருக்கு பெருத்த இழப்பு ஏற்படும். எனவே மனுவை அனுமதிக்கவேண்டும் என்று கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்து 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்:–</u>**

மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் மனுவை திரும்ப தாக்கல் செய்வதில் (Representation) ஏற்பட்ட 116 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். இந்த எதிர்மனுதாரர் இந்த எதிருரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது. மேற்படி மனுதாரர்கள் வழக்கின் "A" அட்டவணை சொத்தை மூன்று சமபாகங்களாக பிரித்து அதில் இரண்டு பாகங்களை ஒதுக்கக்கோரியும். வழக்கின் "B" "C" மற்றும் "D" அட்டவணை சொத்துக்களை நான்கு சமபாகங்களாக பிரித்து அதில் இரண்டு பாகங்களை ஒதுக்கக்கோரியும் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை இந்த எதிருரையின் ஒரு அங்கமாக பாவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி வழக்கின் மனுதாரர்கள் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் சகோதரிகளும், 1ம் எதிர்மனுதாரர் சகோதரரும் ஆவார்கள். மேற்படி வழக்கின் 'எ' அட்டவணை சொத்துக்களில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு உரிய இரண்டு பாகங்களை பிரித்துக்கொடுக்க இவ்வெதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

3. மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் வேண்டுமென்றே மனுவை உரியகாலத்தில் தாக்கல் செய்யாமல் அவற்றை விட்டு விட்டு தற்போது 116 நாட்கள் காலதாமதம் ஆகி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு கூறியுள்ள சங்கதிகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அவற்றின் உடைய உண்மைத்தன்மையை கனம் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டியது மனுதாரர்களின் கடமையாகும். மேற்படி அசல் வழக்கானது 06.06.2023 அன்று கட்டாய விசாரணைக்காக Listல் போடப்பட்டது. மேற்படி வாய்தா தேதியன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் Adjournment Petition தாக்கல் செய்யப்பட்டு இறுதியாக 13.06.2023 அன்று வாய்தா போடப்பட்டது. மேற்படி 13.06.2023 அன்று மீண்டும் Adjournment Petition தாக்கல் செய்யப்பட்டு, இறுதியாக 23.06.2023 அன்று வாய்தா போடப்பட்டது. அன்றைய தினமும் மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், விசாரணை தொடங்காததாலும், மேற்படி வழக்கானது Dismissed for Default செய்யப்பட்டது. அதன்பிறகு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கட்டளை 9 விதி 9 மற்றும் பிரிவு 5ன் காலதாமத மனுவும் தாக்கல் செய்யப்பட்டு, அது முறையே I.A.No.2/2023,

I.A.No.3/2024 என நெம்பராகி அனுமதிக்கப்பட்டது. எனவே சரியான காரணம் ஏதுமின்றி 116 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டியது. எனவே மேற்படி மனுவை இவ்வெதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது. கவனக்குறைவால் இவ்வெதிருரையில் சொல்லப்படவேண்டிய சங்கதிகள் ஏதேனும் விடுப்பட்டிருந்தால் கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய இவ்வெதிர்மனுதாரர் உரிமை கோருகிறார்.

4. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. **<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருந்துபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரையில் உள்ள சர்வே எண்கள் மற்றும் அளவுகளை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட சர்வே எண் விவரங்கள் தவறுதலாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், திருத்தம் செய்யப்படுவதற்கு முன்பு இருந்த சர்வே எண்கள் மற்றும் அளவுகள் சரியானது என்றும், எனவே ஏற்கனவே இருந்த சர்வே எண்கள் விவரத்தை மீண்டும் வழக்குரையில் சேர்க்க திருத்தம் செய்வதற்கு மனுதாரர்கள் தாக்கல் செய்திருந்த மனுவானது 05.02.2025ம் தேதி திருப்பப்பட்டுள்ளது. திருப்பப்பட்ட மனுவை மீண்டும் குறிப்பிட்ட காலத்திற்குள் மீள சமர்ப்பிக்காததால், ஏற்பட்ட 116 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் குறைபாடுகள் சரி செய்து திருப்பப்பட்ட மனுவை மீண்டும் சமர்ப்பிக்க இயலாமல் போய்விட்டது என்றும், மனுவை அனுமதிக்கவேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில், 116 நாட்கள் காலதாமதத்திற்கு மனுதாரர்கள் கூறி இருக்கும் காரணம் ஏற்கும்படி இல்லை. மனுதாரர்கள் வேண்டுமென்றே உரிய காலத்தில் திருப்பப்பட்ட மனுவை மீண்டும் சமர்ப்பிக்காமல் இருந்துள்ளார்கள். அசல் வழக்கில் 06.06.2023ம் தேதி வழக்கு விசாரணைக்காக பட்டியலிடப்பட்டது. அதன் பின்னிட்டு வாதிகள் வழக்கில் சாட்சியம் அளிக்க முன்வராததால், வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் மனு தாக்கல் செய்து விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. உரிய காரணங்கள் குறிப்பிடாமல் 116 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கவேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

7. மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கும்படி இல்லை என்றாலும், வழக்கு சொத்து குறித்து தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு இருதரப்பு விசாரணை அவசியமாகும். அசல் வழக்கில் குறிப்பிட்டுள்ள "C" அட்டவணை சொத்தின் பழைய சர்வே எண்.222/20, புதிய சர்வே எண்.621/57 என்பது சரியான சர்வே எண் என்பதற்கான பட்டா எண்.1291 ஆவணமாகவும், "D" அட்டவணை சொத்தின் பழைய சர்வே எண்.222/20, புதிய சர்வே எண்.621/54 என்பது சரியான சர்வே எண் என்பதற்கான பட்டா எண்.859ஆவணமாகவும், மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.5/2025 இடை மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே அசல் வழக்கை "C" மற்றும் "D" அட்டவணை சொத்துக்கள் சம்மந்தமாக திருத்தம் செய்யவேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி விவரங்களை திருத்தம் செய்ய கட்டளை 6 விதி 17ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவான இ.ம.எண்.6/2025 மனுவை மீண்டும் சமர்ப்பிக்க ஏற்பட்ட 116 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டால்தான் அசல் வழக்குரையை திருத்தம் செய்து அசல் வழக்கை மேல் நடத்தி தீர்வு காணமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதால் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.04.30 17:47:58 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u>** இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.04.30 17:48:06 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.